| | | | |
|---|---|---|---|
| Headline | **A tour to Batu Arang** | | |
| Date | **23 Jun 2011** | Language | **Tamil** |
| MediaTitle | **Makkal Osai** | Page No | **13** |
| Section | **News** | Article Size | **245 $cm^2$** |
| Journalist | **N/A** | Color | **Black/white** |
| Frequency | **Daily** | ADValue | **603** |
| Circ / Read | **28,000 / 180,000** | PRValue | **1,809** |



# அசாம் ஜாவா ஆரோக்கியமாதா ஆலயத்தினரின் ஆன்மிகச் சுற்றுலா





அண்மையில் அசாம் ஜாவா அர்ச் ஆரோக்கியமாதா தேவாலயத்தின் உறுப்பினர்கள் 50 பேர் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டு சில இடங்களுக்குச் சென்று வந்தனர்.

பத்து ஆராங்கில் உள்ள எச்ஐவி பீடிக்கப்பட்டுள்ள 45 நோயாளிகளைச் சந்திக்கும் வாய்ப்பும் பயணத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஏற்பட்டது என்று ஏற்பாட்டுக் குழுப் பொறுப்பாளர் டோமினிக் ஞானபிரகாசம் கூறினார்.

சொந்த கட்டடத்தைக் கொண்டுள்ள இவ்வில்லத்தில் அனைத்து வசதிகளும் உள்ளன. சீனர்கள் 30 பேர், இந்தியர்கள் 5 பேர், மலாய்க்காரர்கள் 7 பேர், மற்ற இனத்தவர் 3 பேர் உள்ளனர்.

ஏற்பாட்டுக் குழுவினர் சார்பாக இவ்வில்லத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதாக அதன் ஒருங்கிணைப்பாளர் அந்தோணி மாசிலாமணி தெரிவித்தார். பத்து ஆராங் புனிதர் மைக்கல் பங்கின் குருவானவர் மறைத்திரு சூசை மதிய உணவிற்கு இடம் வழங்கி குளிர்பானம் கொடுத்து உபசரித்தார்.

பேருந்தில் அனைவரும் பங்கு கொள்ளும் வண்ணம் பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பல நல்ல உள்ளங்கள் இந்த ஆன்மிகப் பயணம் வெற்றி பெற நன்கொடைகள் வழங்கி ஆதரவு நல்கினர் என்று ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த ஆரோக்கியசாமியும் வின்சனும் கூறினர்.